<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>
<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2021–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ம் தேதி (29.10.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 05 . 00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ் . பார்த்தசாரதி
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள்.1.** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் "**2021**" **மாதத்திய நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**
**அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .**
**ந.க.எண்.502/2021/சி1**
**தீர்மான எண் . 211 . பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள்.2.** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதிகளில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் (FSTP) 20 KLD கொள்ளளவு கொண்ட சுத்தகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நிர்வாக அனுமதி (CMA – CE – Roc No.26888/UGSS–2/2018–41நாள் . 09.02.2019 ) வழங்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி (CMA Roc No.26888/2018/DO2நாள்.06.03.2019) பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளி கோரி பணி ஆணை Roc No. 0103/2019/E1நாள் . 31.07.2019 ல் வழங்கப்பட்டு பணி துவங்கப்படும் போது அப்பகுதி வாழ் மக்கள் மேற்படி பணியை செய்ய விடாமல் தடுத்து விட்டனர். அதன்பிறகு சமாதான பேச்சு வார்த்தை நடத்தியும் பணி செய்ய இயலவில்லை. எனவே, அப்பணியை எடுத்த ஒப்பந்ததாரர் 23.09.2021 அன்று கொடுத்த கடிதத்தின் அடிப்படையில் பணியை தொடர்ந்து செய்ய இயலவில்லை எனவும் , பணியை செய்ய ஒவ்வொரு முறையும் பாதுகாப்பிற்கு காவல்துறையை கொண்டு பணி செய்யும் நிலை உள்ளது . இதனால் ஒப்பந்ததாரருக்கு ஆட்கள் விரையம் , பொருட்கள் விரையம் மற்றும் மனஉளச்சலும் ஏற்படுகின்ற காரணத்தினால்தான் செய்து முடித்த பணிக்கு தொகை வழங்குமாறும் பணியை ரத்து செய்து தருமாறும் கடிதம் கொடுத்துள்ளார். அதனடிப்படையில் 01.10.2021 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக தலைமைப்பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர் மற்றும் நகராட்சியின் மண்டல செயற் பொறியாளர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டதில் மேற்படி பணியை செய்ய இயலவில்லை எனில் பணியை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கூறியதின் அடிப்படையில் மேற்படி பணியை ரத்து செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது .
அலுவலக குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம் .
**ந.க.எண். 0103/2019/இ1**
**தீர்மான எண் . 212 . பணியை ரத்து செய்வதற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.3.** அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்ட நேர்முக கடிதம் எண் 21050/MA5/2021, நாள் 17.09.2021ல் வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்பாக மழையினால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி தொற்று நோய்கள் எதுவும் வராமல் தடுத்திடும் வகையில் மழைநீல் செல்லக்கூடிய அனைத்து வடிகால் கால்வாய்களை எந்திரங்கள் வாயிலாகவோ அல்லது தூய்மை பணியாளர்கள் மூலமாகவோ முழுமையாக தூர்வாரப்பட்டு சுத்தம் செய்திட வேண்டும் எனவும், தூர் வாரப்படும் கழிவு மண்ணை உடனுக்குடன் அகற்றிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதின் பேரில் நகராட்சியில் கழிவு மண்ணை அகற்ற போதிய வாகனங்கள் இல்லாத காரணத்தினால் நெல்லிக்குப்பம் அக்ரோ நிறுவனம் மூலம் இரண்டு டிராக்டர் டிரெய்லர் நாள் ஒன்றுக்கு ஒரு வாகனத்திற்கு வாடகை ரூ.3500/– +GST 5% என்கின்ற அடிப்படையில் 20.09.2021 முதர் 14.10.2021 முடிய டிராக்டர் எண்கள் (1). TN 57U 6530 மற்றும் (2). TN 31D

9268 ஆகிய இரண்டு வாகனங்கள் கழிவு மண்ணை அகற்ற அனுப்பப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.1,83,750/– வரப்பெற்றதில் மன்ற தீர்மான எண் 172, நாள் 21.09.2021ல் டிராக்டர், டிரெய்லர் வாடகை தொகை வழங்கிட ரூ.1,25,000/–க்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. கூடுதலாக வரப்பெற்றுள்ள தொகை ரூ.58,750/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு) 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இச்செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம். அவசரம் அவசியம் முன்னிட்டு செய்துள்ளதால் அனுமதிக்கலாம்.

**(2958/2021/எச்1)**

**தீர்மான எண் . 213 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.4..** நகராட்சி பொதுசுகாதாரம் – தற்சமயம் பருவமழை துவங்கி தொடர்ந்து பெய்து வருவதினால், மழைநீர் தேங்கி சென்ற இடங்களில் கிருமிநாசினிகள் தெளிக்க வேண்டி உள்ளதினாலும், பொதுமக்கள் வந்து செல்லக்கூடிய பிரதான சாலைகளில் தினமும் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டு வருவதினால், பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் கருப்பு பினாயில் ஆகியன கூடுதலான அளவு தேவைப்படுகிறது. மேலும், கொரோனா தொற்று ஏற்படாத வண்ணம் தடுப்பு நடடிவக்கை மேற்கொள்ள அதிக குடிசை வீடுகள் அமைந்துள்ள (மொத்தம் 15 வார்டுகள் எண்ணிக்கை) குடியிருப்பு பகுதிகளில் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட வேண்டி உள்ளதினாலும், கீழ்கண்ட அளவு கிருமிநாசினிகள்

1. நீர்த்த சுண்ணாம்பு – 15000 கி.கி
2. பிளிச்சீங் பவுடர் – 5000 கி.கி மற்றும்
3. பினாயில் – 200 லிட்டர்

வாங்கி வழங்கிடுவதற்கு உத்தேச செலவினம் ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், கிருமி நாசினிகளை விலை குறைவாக உள்ள சென்னை தி.நகர், தன்வந்திரி நானோ ஆயூசாதி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் வாங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.– 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இச்செலவினத்தினை கொரோனா தொற்று தடுப்பு நிதி அல்லது SUC நிதி நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

3.கடந்த முறை வாங்கப் பெற்ற கிருமிநாசினிகள் விலை குறைவாக சப்ளை செய்திட தன்வந்திரி நானோ ஆயூசாதி லிமிமெட், தி.நகர். சென்னை–17 நிறுவனத்தில் வாங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் . 214 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.5..** நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியியல் பிரிவில் வருவாய் நிதியில் தெரு மின் விளக்கு பராமரிப்பு பணிகளை பராமரிக்க ( அக்டோபர் – 2021 மாதம் மட்டும் ) தேவையான 4 ஆட்களை சப்ளை செய்யும் பணிக்கு 28.09.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி.S .பரிமளா<br>க/பெ. சுவாமிநாதன்<br>19,மோரைஎவரெட்புரம் . நெல்லிக்குப்பம் | 475/– |
| 2 | திருமதி.N .சந்திரசேகர்<br>82 , அண்ணா நகர் .<br>நெல்லிக்குப்பம் | 450/– |
| 3 | திருமதி.S .புவனேஸ்வரி<br>3,பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையம்<br>நெல்லிக்குப்பம் | 400/– |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** . 1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.S .புவனேஸ்வரி , 3,பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையம் நெல்லிக்குப்பம்அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு ம;றறு;ம தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண். 3328 /2021/இ1

**தீர்மான எண் . 215 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.6..** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் தினசரி பராமரிப்பு பணிக்கு அனுப்ப தேவையான 4 ஆட்களை சப்ளை செய்யும் ( அக்டோபர் 2021 – மாதம் மட்டும் ) பணிக்கு 29.09.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | குடிநீர் தினசரி பராமரிப்பு பணிக்கு ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு கூலி தொகை ரூ. |
|---|---|
| திருமதி.S .புவனேஸ்வரி<br>3 , பஸ் நிலையம் .<br>நெல்லிக்குப்பம் | 380/– |
| திருமதி.S .பரிமளா<br>க/பெ. சுவாமிநாதன்<br>19, மோரை எவரெட்புரம் . நெல்லிக்குப்பம் | 360/– |
| திருமதி.N .சந்திரசேகர்<br>82 , அண்ணா நகர் .<br>நெல்லிக்குப்பம் | 400/– |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** .1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி. S .பரிமளா, 19, மோரை எவரெட்புரம் . நெல்லிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

<u>ந.க.எண்.3327 /2021/இ1</u>

**தீர்மான எண் . 216 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.7..** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்கள் தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் காலை , மாலை இரண்டு வேலைகள் நகரில் பல்வேறு பகுதிகளில் உள்ள 13 மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் மற்றும் மேல்நிலை தொட்டி வளாகத்திலிலுள்ள 29 ஆழ்துளை கிணறுகள் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு தினசரி சப்ளை செய்யப்படுகிறது . தற்சமயம் குடிநீர் பிரிவில் மேல்நிலை தண்ணீர் தொட்டி காவலர்கள் 4 நபர்கள் மட்டுமே உள்ளனர் .இவர்களை வைத்துக்கொண்டு அனைத்து மேல்நிலை தண்ணீர் தொட்டி மற்றும் ஆழ்துளை கிணறுகளை பராமரிக்க இயலாமல் உள்ளது . மேலும் மின் தடை காலங்களிலும் மின்சாரம் மின்சாரம் உயர் மற்றும் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மின் மாற்றம் ஏற்படும் பொழுது மின் மோட்டார் பம்புகளை இயக்குவது மிக சிரமமாக உள்ளது . இதனால் தினசரி குடிநீர் விநியோகம் தடைபடும் நிலை உள்ளது. எனவே குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் தினசரி குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்கவும் நவம்பர் மாதம் 2021 ஒரு மாதத்திற்கு 4 நபர்களை மாவட்ட

ஆட்சித் தலைவர் அவர்கள் தர விலை பட்டியல் படி ஒரு நாளைக்கு ரூ.360/. வீதம் பணி விலை அடிப்படையில் பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>**அலுவலக குறிப்பு:- 1.**</u> மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 3444/2021/இ1)**

**தீர்மான எண் . 217 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.8..** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 30 வார்டுகளிலும் உள்ள தெரு மின்விளக்கு பராமரிப்பு பணிகள் மற்றும் இயக்குதல் பணிகள் அனைத்தும் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் செய்து வரப்பட்டது . தற்சமயம் மேற்படி ஒப்பந்ததாரர் ஒப்பந்த பணியை செய்ய இயலாது என கடிதம் கொடுத்துள்ளார் . இதனால் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் அனைத்தும் தடைபட்டுள்ளது . பொது மக்களிடம் இதனால் அவப் பெயர் ஏற்பட்டுள்ளது . பொது மக்கள் நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதியும் தெரு மின் விளக்கு பராமரிப்பு பணிகளை பராமரிக்க நகராட்சி ஒப்பந்ததாரர் ஒருவர் மூலம் செய்து முடிக்க 4 நபர்கள் தேவைப்படுவதால் அதற்கு ஆகும் செலவு ரூ.48000/– ஆகும் . ( நவம்பர் – 2021 மாதம் மட்டும்) இதனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண். 3445 /2021/இ1**

**தீர்மான எண் . 218 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.9..** தமிழக அரசின் சாதனையை முன்னிட்டு தொழில் மலர் 2021 நெல்லிக்குப்பம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை விளம்பரம் செய்ததில் தினமலர் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 21000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 2658/2021/இ1)**

**தீர்மான எண் . 219 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.10..** தமிழக அரசின் சாதனையை முன்னிட்டு தொழில் மலர் 2021 ( ஆயுத பூஜை சிறப்பு மலர் ) நெல்லிக்குப்பம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 69/செமதொ/2021 நாள்.05..08.2021 ன் படி விளம்பரம் செய்ததில் தினத்தந்தி நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ .24931/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 3440/2021/இ1)**

**தீர்மான எண் . 220 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.11..** தமிழக அரசின் சாதனையை முன்னிட்டு தொழில் மலர் 2021 நெல்லிக்குப்பம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 77/செமதொ/2021 நாள்.25..08.2021 ன் படி விளம்பரம் செய்ததில் மாலை முரசு (A/c . Name . Chennai Murasu Private Ltd ) நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ .5000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 3442/2021/இ1)**

**தீர்மான எண் . 221 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.12..** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 30 வரை நகராட்சியால் பராமரிக்கப்படும் தெருமின் விளக்குகளை தனியார் மயமாக்கல் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைத்து பராமரித்திட சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறை ந.க.எண்.48588/2012/DO3 நாள். 04.09.2013 ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் , நகராட்சி நிர்வாக ஆணையரகம் , சென்னை அவர்களின் ந.க..எண். 5881 /2020/ DO1 நாள். 05.08.2020 ன் படி மேம்படுத்தும் பொருட்டு **ரூ.24,00** இலட்சம் மதிப்பீட்டிற்கு ( இரண்டாம் ஆண்டிற்கு ) ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு 09.10.2021 அன்று மாவட்ட அளவில் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் , கடலூார் அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு மாலை மலர் நாளிதழிக்கு விளம்பரம் தொகை ரூ.12398/—ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.2606/2019/E1)**
**தீர்மான எண் . 222 . அனுமதிக்கப்பட்டது**

**மன்றபொருள்.13..** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN-31/ BA 1896 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதில் சர்வீஸ் செய்யப்பட்டதற்கு ரூ.4925/— ( Rs . Four thousand Nine hundred Twenty five only) செலவினம் திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களால் செலவு செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது . அதனால் இத் தொகையை திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.3361/2021/இ1**
**தீர்மான எண் . 223 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.14..** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN-31/ BA 1896 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதில் சர்வீஸ் செய்யப்பட்டதற்கு ரூ.4975/— ( Rs . Four thousand Nine hundred Seventy five only) செலவினம் திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களால் செலவு செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது . அதனால் இத் தொகையை திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.3362/2021/இ1**
**தீர்மான எண் . 224 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.15..** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN-31/ BA 1896 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதில் சர்வீஸ் செய்யப்பட்டதற்கு ரூ.4950/— ( Rs . Four thousand Nine hundred Fifty only) செலவினம் திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களால் செலவு செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது . அதனால் இத் தொகையை திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.3363/2021/இ1**
**தீர்மான எண் . 225 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.16..** தலைவர் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் ஆ1/8163/2020, நாள் 01.10.2021ன்படி மாபெரும் தடுப்பூசி முகாம் 03.10.2021 அன்று தமிழகம் முழுவதும் நடைபெற உள்ளதினால் அச்சமயம் கடலூர் மாவட்டத்திலும் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடத்திடுவதற்கு அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் நகராட்சி பகுதியில் 15 இடங்களில் மையங்கள் அமைத்து முகாம்கள் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முகாம்கள் நடைபெறும் பகுதிகளில் மைக் விளம்பரம் செய்திடவும், பேனர் மற்றும் மையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஸ்நாக்ஸ் வழங்கிடவும், ஒரு மையத்திற்கு ரூ.1200/– செலவிட அனுமதித்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண் 5773/2020/ஜெ2, நாள் 11.09.2021ன்படி ஆணை வழங்கி உள்ளமையால், ஒரு மையத்திற்கு ரூ.1200/– வீதம் 15 மையங்களுக்கு ரூ.18000/– செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு.) 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியத்தினை தனி அலுவலர் வழங்கிய முன் அனுமதியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. இச்செலவினத்தினை கோவிட்–19 தடுப்பு பணிக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து அல்லது வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் . 226 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.17..** நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பணிக்காக நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், DBC பணியாளர்கள், நகராட்சி மருத்துவமனை பணியாளர்கள், அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவருக்கும் தினந்தோறும் ஒருமுறை பயன்படுத்தக் கூடிய முக கவசம் (One time use face mask) வழங்க வேண்டியுள்ளதினால், நகராட்சியில் இன்றைய (28.10.2021) தேதியில் 2200 எண்ணிக்கை மட்டுமே கை இருப்பு உள்ளதினால், தினமும் பணியாளர்களுக்கு வழங்கிடுவதற்கு தேவையான 10,000 எண்ணிக்கை முக கவசங்கள், ராயல் பேப்பர் மார்ட், செம்மண்டலம், கடலூர் என்கின்ற முகவரியில் ஒன்றின் விலை ரூ.4.00/– என்கின்ற வாங்கிடவும், அதற்கான செலவினம் ரூ.40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு) 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ''கடலூர் ராயல் பேப்பர் மார்ட்'' ல் வாங்கிடுவதற்கு உரிய ஆணை வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. இச்செலவினத்தினை கொரோனா தொற்று தடுப்பு நிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் . 227 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.18..** தலைவர் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் ஆ1/8163/2020, நாள் 28.10.2021ன்படி கோவிட் 19 மாபெரும் தடுப்பூசி முகாம்கள் ஏழாவது முறையாக 30.10.2021 அன்று தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற உள்ளதினால், கடலூர் மாவட்டத்திலும் அனைத்து பகுதிகளிலும் முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டதின் காரணமாக நகராட்சி பகுதியில் 10 இடங்களில் தடுப்பூசி மையங்கள் அமைத்து 18 வயது நிரம்பியவர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தடுப்பூசி முகாம்கள் நடைபெறுவதினை பொதுமக்கள் அனைவரும் அறியக்கூடிய வகையில் விளம்பரம் செய்திடவும், மையங்களில் பணிபுரியக்கூடிய செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஸ்நாக்ஸ், தேநீர் வழங்கிடவும் ஒரு மையத்திற்கு ரூ.1100/– (பேனர்கள் முன்பு அச்சடிக்கப்பட்டவையே பயன்படுத்தப்படுகிறது) செலவிட அனுமதித்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண் 5773/2020/ஜெ2, நாள் 11.09.2021ன்படி ஆணை வழங்கி உள்ளமையால், ஒரு மையத்திற்கு ரூ.1100/– வீதம் 10 மையங்களுக்கு ரூ.11,000/– செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு.) 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியத்தினை தனி அலுவலர் வழங்கிய முன் அனுமதியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. இச்செலவினத்தினை கோவிட்–19 தடுப்பு பணிக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து

அல்லது வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் . 228 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.19..** தலைவர் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் ஆ1/8163/2020, நாள் 20.10.2021ன்படி கோவிட் 19 மாபெரும் தடுப்பூசி முகாம்கள் ஆறாவது முறையாக 23.10.2021 அன்று தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற உள்ளதினால், கடலூர் மாவட்டத்திலும் அனைத்து பகுதிகளிலும் முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டதின் காரணமாக நகராட்சி பகுதியில் 11 இடங்களில் தடுப்பூசி மையங்கள் அமைத்து 18 வயது நிரம்பியவர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தடுப்பூசி முகாம்கள் நடைபெறுவதினை பொதுமக்கள் அனைவரும் அறியக்கூடிய வகையில் விளம்பரம் செய்திடவும், மையங்களில் பணிபுரியக்கூடிய செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஸ்நாக்ஸ், தேநீர் வழங்கிடவும் ஒரு மையத்திற்கு ரூ.1100/– (பேனர்கள் முன்பு அச்சடிக்கப்பட்டவையே பயன்படுத்தப்படுகிறது) செலவிட அனுமதித்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண் 5773/2020/ஜெ2, நாள் 11.09.2021ன்படி ஆணை வழங்கி உள்ளமையால், ஒரு மையத்திற்கு ரூ.1100/– வீதம் 11 மையங்களுக்கு ரூ.12,100/– செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு.) 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் வழங்கிய முன் அனுமதியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இச்செலவினத்தினை கோவிட்–19 தடுப்பு பணிக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து அல்லது வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் . 229 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.20..** தலைவர் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் ஆ1/8163/2020, நாள் 07.10.2021ன்படி கோவிட் 19 மாபெரும் தடுப்பூசி முகாம்கள் 10.10.2021 அன்று தமிழகம் முழுவதும் நடைபெற உள்ளதினால், அச்சமயம் கடலூர் மாவட்டத்திலும் மேற்கண்ட முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டதன் காரணமாக நகராட்சியில் 20 இடங்களில் மையங்கள் அமைத்து முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டதன் காரணமாக நகராட்சியில் 20 இடங்களில் மையங்கள் அமைத்து முகாம்கள் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முகாம்கள் நடைபெறும் இடங்களை பொதுமக்கள் அறியும் வகையில் விளம்பரம் செய்திடவும், மையங்களில் பேனர்கள் வைத்திடவும் அங்கு பணி மேற்கொள்ளும் செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஸ்நாக்ஸ், தேநீர் வழங்கிடவும் ஒரு மையத்திற்கு ரூ.1200/– செலவிட அனுமதித்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண் 5773/2020/ஜெ2, நாள் 11.09.2021ன்படி ஆணை வழங்கி உள்ளமையால், ஒரு மையத்திற்கு ரூ.1200/– வீதம் 20 மையங்களுக்க்கு ரூ.24000/– செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு.) 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியத்தினை தனி அலுவலர் வழங்கிய முன் அனுமதியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இச்செலவினத்தினை கோவிட்–19 தடுப்பு பணிக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து அல்லது வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் . 230 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.21 .** 2021ல் நெல்லிக்குப்பம் நகராட்சியின் நகரமன்ற வார்டு உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான நகர்புற உள்ளாட்சி மன்ற சாதாரண தேர்தல்–2021 மற்றும் நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற துணைத்தலைவர், குழு உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான மறைமுக தேர்தல்கள்–2021 ஆகிய தேர்தல்களை நடத்திட கீழ்காணும் தலைப்புகளில் தேர்தல் செவினம் ரூ**30.00** இலட்சம் ஆகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | தேர்தல் செலவினங்களின் தலைப்புகள் | உத்தேச தேர்தல் செலவினங்கள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல்–2016 அறிவிப்பு வெளியானதும் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலுக்கு வந்தவுடன் நகரிலுள்ள அரசு கட்டிடங்கள், நகராட்சி கட்டிடங்கள், அனைத்து பள்ளி கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டிட சுவர்களில் அனுமதியின்றி எழுதப்பட்டுள்ள அரசியல் கட்சி விளம்பரங்களை அழித்தல், டிஜிட்டல் பேனர்கள் அகற்றுதல் மற்றும் போஸ்டர்கள் அகற்றுதல் மற்றும் வாக்கு பதிவின்போது வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தூரம் எல்லை கோடு அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் | 0.30 |
| 2 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல் அலுவலக பணிக்கு தேவையான எழுது பொருட்கள் (A4–பேப்பர்–15 ரீம், Legal பேப்பர்-5 ரீம், உறையுடன் கூடிய CD–50 எண்ணிக்கைகள், உறையுடன் கூடிய DVD–50 எண்ணிக்கைகள்) எழுத தேவையான 10 குயர் வெள்ளை பேப்பர், பதிவேடுகள், ரப்பர் முத்திரைகள், பிரித்தெறி சீல் ஆகியவைகள் மற்றும் இதர எழுது பொருள் செலவினங்கள் | 0.50 |
| 3 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல் பணிக்கு என தனியே Latest Model LED Monitor கொண்ட ISI தரம் வாய்ந்த Computer ஒரு செட், ஸ்கேனர், ஜெராக்ஸ் இணைந்த Laser jet Printer ஒன்றும், பிரிண்டருக்கு தேவையான டோனர்கள்–5 எண்ணிக்கைகள் புதியதாக வாங்கிட ஆகும் தோராய செலவினங்கள் | 2.20 |
| 4 | நகராட்சியில் தற்சமயம் ஒரு ஈப்பு வாகனம் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. தேர்தல் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு பல பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், நிலையில் பழுதடைந்துள்ள TN31 BA1896 ஈப்பு வாகனத்தினை முழுவதும் பழுது நீக்கம் செய்திடவும், தற்போது பயன்பாட்டிலுள்ள TN31 AE 5944 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள சிறு சிறு பழுதுகளை நீக்கம் செய்திடவும் ஆகும் தோராய செலவினங்கள் | 2.00 |
| 5 | வாக்குச்சாவடி பட்டியல், வாக்காளர் பட்டியல், மின்னனு வாக்கு இயந்திரத்தில் பொருத்தும் வேட்பாளர் பெயர், புகைப்படம், சின்னங்கள் அடங்கிய வாக்கு சீட்டுகள், அஞ்சல் வழி வாக்குச் சீட்டுகள் மற்றும் வாக்காளர்களுக்கு வழங்கும் பூத் சிலிப் ஆகியவைகள் அச்சடித்து பெற ஆகும் தோராய செலவினங்கள் | 2.50 |
| 6 | வார்டு பிரிவினை நகர வரைபடங்கள், வாக்குச்சாவடி (Polling Station Map) வரைபடங்கள் (ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் தனித்தனியே), மண்டலம் பிரிப்பு (Zonal Map) வரைபடங்கள், வாக்கு எண்ணிக்கை மையம் (Counting Centre) வரைபடங்கள் ஆகியவைகள் ஆட்டோ | 0.50 |

| | | |
|---|---|---|
| | கேடு (Auto cad)ல் தயாரித்து பெற ஆகும் தோராய செலவினங்கள் | |
| 7 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல் பணிக்கு வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள் ஆகியோர்களுக்கு மூன்று முறை பயிற்சி வகுப்புகள் நடத்தும் பணி மேற்கொள்ளுதல், மண்டப வாடகை, ஒலிபெருக்கி அமைத்தல், வேட்பு மனு தாக்கலின் பொழுதும், வாக்கு பதிவு நாளிலும் மற்றும் வாக்கு எண்ணிக்கையின் போதும் வீடியோ படம் எடுத்தல் ஆகிய பணிகளுக்கு ஆகும் தோராய செலவினங்கள் | 0.50 |
| 8 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல் வாக்குச்சாவடிகளுக்கு தேவையான பொருட்கள், வாக்கு எண்ணும் மையத்திற்கு தேவையான பொருட்கள், சணல் சாக்குகள் (Gunny Bag) வாடகை மற்றும் இதர தோராய செலவினங்கள் | 3.00 |
| 9 | அனைத்து வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையம் ஆகியவற்றில் மின் வசதி, சாய்தள வசதி, குடிநீர் வசதி, கழிவறை வசதி, சாமினா பந்தல், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் மாற்று திறானளிகளுக்கு வீல் சேர் வாடகை ஆகியவைகள், வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு வேண்டி, தடுப்பாணை அமைத்தல், மின்தடை ஏற்படா வண்ணம் ஜெனரேட்டர் வாடகைக்கு எடுத்தல், அஞ்சல் வழி வாக்குச்சீட்டுகள் எண்ணிட வாக்கு எண்ணும் ட்ரே தயாரித்தல், அஞ்சல் வழி வாக்குகள் பெற தனியே பெரிய அளவில் ஒரு கலாய் தகட்டினால் ஆன வாக்குப்பெட்டி தயாரித்தல், வாக்கு எண்ணிக்கைக்கு தேவையான மேசைகள், நாற்காலிகள் வாடகைக்கு எடுத்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கை விவரத்தினை ஒவ்வொரு சுற்று முடிவடைந்தவுடன் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் பெயர்களை ஒலிபெருக்கி மூலம் அறிவிக்க ஒலிபெருக்கி வாடகைக்கு எடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினங்கள் மற்றும் இதர செலவினங்கள் | 3.00 |
| 10 | வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பேச், தேர்தல் அவசரம் ஸ்டிக்கர்கள், வார்டு உறுப்பினர் தேர்தல், தலைவர் தேர்தல் வேட்பாளர்கள் பெயர் அடங்கிய போஸ்டர்கள், வாக்குச்சாவடி எண் மற்றும் வாக்கு பதிவு பகுதிகளின் தெருக்களின் பெயர்கள் அடங்கிய போஸ்டர்கள், வாக்குச்சாவடி மையத்தில் வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக வாக்குச்சாவடியில் உள்ளே, வெளியே ஸ்டிக்கர்கள், அங்கீரிக்கப்பட்ட அரசியல் கட்சி சின்னங்கள், சுயேட்சை வேட்பாளர்களுக்கான சின்னங்கள், அஞ்சல் வழி வாக்குச் சீட்டுகளுக்கான உறைகள் மற்றும் இதர அத்தியாவசிய எழுது பொருட்கள் வாங்கிட ஆகும் தோராய செலவினங்கள் | 2.00 |
| 11 | மண்டல அலுவலர்களுக்கான வாகனம் வாடகை, டீசல் செலவினம், வாக்குச்சாவடி அலுவலர்கள், வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், வாகன ஒட்டுநர்கள், வரவேற்பு அலுவலர்கள், நுண் பார்வையாளர்கள், CCTV.Camera.Video மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் | 9.50 |

| | | |
|---|---|---|
| | பிரிவு எழுத்தர் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO's) ஆகியோர்களுக்கான ஊக்க படிகள் (Incentive Allowance) வழங்க ஆகும் தோராய செலவினங்கள் | |
| 12 | நகர்புற உள்ளாட்சித் தேர்தல் பணிகளுக்கு வேட்பு மனுக்கள் பெறும் நாட்கள், வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் காவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், வாக்கு எண்ணிக்கை மையத்தில் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் மற்றும் பாதுகாவர்கள் ஆகியோர்களுக்கான உணவீட்டு செலவினம் | 4.00 |
| | **மொத்தம்** | **30.00** |

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்

**(கோ.எண் 1456/2021/எப்1)**

**தீர்மான எண் . 231 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.22 .** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சிறப்பு திட்ட பணிகள் , பொறியியல் பிரிவு பணிகள் மற்றும் பணி நடக்கும் போது தேவையான பணி ஆட்கள் இந்நகராட்சியில் இல்லை . மேற்படி இந்நகராட்சியில் 1 பொதுப்பணி மேற்பார்வையாளரும் , பொறியாளர் ஒருவர் மட்டுமே உள்ளனர் . இதனால் திட்ட பணிகளை பார்ப்பதற்கு இயலாமல் உள்ளது . மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அலுவலகத்திலிருந்து அவ்வப்போது கேட்கப்படும் திட்ட மதிப்பீடுகள் , பணி விவரங்களை தயார் செய்வதற்கும் இயலவில்லை சாலைகள் (ம) குடிநீர் , தெருவிளக்கு தொடர்புடைய பணிகள் செய்யவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி பொறியியல் பிரிவில் PWD தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல் அடிப்டையில் (STANDARD SCHEDULE OF RATES) ஒரு தொழில் நுட்ப பணியாளரை ஆகஸ்ட் 2021 – 1ந் தேதி முதல் அக்டோபர் 2021 வரை ஒப்பந்ததாரர் திருமதி S . புவனேஸ்வரி மூலம் நியமனம் செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயித்த படி மற்றும் இதற்கான ஊஊதியத்தை பொது நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:</u> . 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2.தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் .
3. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயித்த தின கூலி படி வழங்கலாம் .

**(ந.க.எண். 3229 /2021/இ1**

**தீர்மான எண் . 232 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.23 .** நெல்லிக்குப்பம் நகராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் (JJM) AMRUT – 2.0 விவரங்கள் குறித்த புக்லெட்டுகள் மற்றும் Zonalation Map நகர வரைபடத்தில எங்கு எல்லாம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் உள்ளதோ மற்றும் குடிநீநா இணைப்புகள் எந்த தெருவில் எவ்வளவு உள்ளது என்ற விவரத்தினை வார்டு வாயிலாக A2 அளவில் 30 ல்ர்டுக்கும் கலர் பிரிண்ட் போட்டு 3 செட் மற்றும் வார்டுகளையும் சேர்த்து A2 அளவில் 3 செட் கலர் பிரிண்ட் போட்டு வைக்க வேண்டும் என 04.10.2021 அன்று வந்த Email-யில் தெரிவித்து அது கறித்து ஆய்வுக்கூட்டம் 12.10.2021ல் அன்று நடைபெற உள்ளதில் கலந்து கொண்டு ஆய்வுக்கூட்டத்தில் தரும் அறிவுரைகள் கேட்டு அதன்படி விரிவான அறிக்கை தயார் செய்து சமர்பிக்க வேண்டும் என கூறியதின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறவுரையின்படி மேற்படி விரிவான அறிக்கை தயார் செய்ய ஆகும் தோரா செலவினம் ரூ.60000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : 1) அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசரம் அவசியம் கருதி பணி மேற்கொண்டதையும் அதற்கான தொகை வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

<u>ந.க.எண்.3449/2021/இ2</u>

**தீர்மான எண் . 233 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.24 .** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சி பொறியியல் பிரிவில் தேசபிதா மகாத்மாகாந்தி பிறந்த அக்டோபர் 2/2021 நாளில் நகராட்சி முழுவதும் மரம் நடவேண்டும் என கடலூர் மாவட்ட ஆட்சியர் ந.க.எண்.ஆ1/17818/2021 நாள்.21.09.2021 தேதிய செயல் முறை உத்திரவிட்டதற்கிணங்க நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதிகளில் குழி தோண்டி மரம் நட்டு தருவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒரு மரம் நட்டு கொடுப்பதற்கான கீழ்கண்ட மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வறுமாறு.

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒரு மரம் குழி தோண்டி நீர் ஊற்றி தருவதற்கான விலைப்புள்ளி (ஒரு மரம் நட்டு தருவதற்கான விலைப்புள்ளி மட்டும்) |
|---|---|
| திருமதி.S .புவனேஸ்வரி<br>3 , பஸ் நிலையம் .<br>நெல்லிக்குப்பம் | 110/– |
| திருமதி.S .பரிமளா<br>க/பெ. சுவாமிநாதன்<br>19, மோரை எவரெட்புரம் .<br>நெல்லிக்குப்பம் | 100/– |
| திருமதி.N .சந்திரசேகர்<br>82 , அண்ணா நகர் .<br>நெல்லிக்குப்பம் | 120/– |

<u>அலுவலகக்குறிப்பு:</u> .1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி. S .பரிமளா, 19, மோரை எவரெட்புரம் நெல்லிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.3096 /2021/இ2</u>

**தீர்மான எண் . 234 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.25 .** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 30 வார்டுகள் அமைந்துள்ளது. அதில் நகராட்சியில் எல்லை அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் (Urban Primary Health Centre) யில் உள்ள தென்னை மரம் மற்றும் ஆலமரம் இரண்டு அரசமரம் மற்றும் அப்பகுதிகளில் உள்ள ஆலமரம் விழுது மற்றும் அரசமரம் கிளைகளால் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் இடிந்து விழும் அபாயம் உள்ளது. தினசரி நாளிதழ் மூலமாகவும் பொது மக்கள் மூலமாகவும் புகார்கள் வந்துள்ளது. மேலும், இதனால் மருத்துவமனைக்கு வரும் நோயளிகள் மற்றும் கர்ப்பினி பெண்கள் அவர்கள் அச்சப்பட்டு அவர்களின் புகார்களின் அடிப்படையில் மரங்களை அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. இந்த பணியினை உடனடியாக செய்ய போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் நகராட்சி ஒப்பந்ததாரரை ஒருவரை நியமித்து அவர்கள்மூலம் இப்பணியினை செய்து முடிக்கலாம். இதனை செய்து முடிக்க பணியின் அவசரம் அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் மேலும் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலன் கருதியும் இப்பணியினை விரைவாக செய்து முடிக்கலாம். இதற்கு மாவட்ட வருவாய் அலுவலர் நேரடியான ஆய்வின் மூலமாகவும் நேரடியாக கூறப்பட்ட அறிவுறுத்தலின்படி இப்பணியினை செய்து முடிக்கவும் மற்றும் வரும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு

முன்னெச்சரிக்கைக்காக இப்பணியினை விரைவாக செய்து முடிக்க உத்தேச செலவினம் ரூ.55000/—ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 0951/2019/இ1)**

**தீர்மான எண் . 235 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.26 .** நெல்லிக்குப்பம் நகராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள பழைமையான இரண்டு அரசமரம் மற்றும் ஒரு தென்னை மரத்தை வெட்டி அப்புறபடுத்தி சம படுத்தும் பணிக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து 30.07.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி.S .பரிமளா<br>க/பெ. சுவாமிநாதன்<br>19,மோரைஎவரெட்புரம் . நெல்லிக்குப்பம் | 60000/— |
| 2 | திரு . N .சந்திரசேகர் ,<br>82 ,அண்ணா நகர் ,<br>நெல்லிக்குப்பம் . | 58000/— |
| 3 | திருமதி.S .புவனேஸ்வரி<br>3,பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையம்<br>நெல்லிக்குப்பம் | 55000/— |

<u>அலுவலகக்குறிப்பு:</u> . 1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி . S .புவனேஸ்வரி , 3,பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையம் நெல்லிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்று;ம் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண். 3773 /2021/இ1

**தீர்மான எண் . 236 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.27.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/ AE 5944 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் மேற்படி கீழ்கண்ட பழதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.140000/—ஐ நகராட்சி பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>பழுதுகள் விபரம்</u>

1. டீசல் பம்பு நாசில் சர்வீஸ் செய்தல் .
2. கிளர்ச் பிளேட் கவர் அசம்பலி செட் மாற்ற வேண்டும் .
3. கியர் பாக்ஸ் , சிக்நாநசர் , பேரிங், கோண் சர்வீஸ் வேண்டும் .
4. இன்ஜின் பெட் , கியர் பாக்ஸ் பெட் மாற்ற வேண்டும் .
5. பிரேக் ஷீ 4 வீல் , பேரிங் உள்பட மாற்ற வேண்டும் .
6. டிங்கரிங் மற்றும் பெயிண்டிங் டச்சப் செய்ய வேண்டும் .
7. ரேடியட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும் .
8. இன்ஜின் ஆயில் , கியர் பாக்ஸ் ஆயில் , கூலண்டு ஆயில் ,பிரேக் ஆயில் மாற்ற வேண்டும் .
9. இன்ஜின் ஆயில் பில்டர் , டீசல் பில்டர் , ஏர் பில்டர் மாற்ற வேண்டும் .

10. வீல் பேலன்ஸ் அலைண்மெண்ட் செக்கப் .
11. வாட்டர் சர்வீஸ் மற்றும் கிரிஸ்.
12. ஹெட் லைட் , லெப்ட் சைடு மாற்ற வேண்டும் .
13. எலக்ட்ரிஷியன் வேலை செய்ய வேண்டும் .

அலுவலக குறிப்பு :— 1. மன்றம் அனுமதிக்கலாம்
2.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 3310/2021/இ1)**

**தீர்மான எண் . 237 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.28.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/ AE 5944 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் மேற்படி பழதுகளை சரி செய்ய அவசர அவசியம் கருதி வருவாய் நிதியிலிருந்து 21.10.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் DSN நகர் , காரமணிக்குப்பம் , | 137706/— |
| 2 | விஜியலட்சுமி ஆட்டோமெபைல்ஸ் செம்மண்டலம் கடலூர் . | 141010/— |
| 3 | ஸ்ரீ மாரியம்மன் டிராக்டர் ஒர்க்ஸ் கடலூர் மெயின் ரோடு வெள்ளகேட்.. | 143193/— |

<u>அலுவலகக்குறிப்பு:</u> . 1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் , DSN நகர் , காரமணிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண். 3310 /2021/இ1**

**தீர்மான எண் . 238 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.29.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான துலுக்கப்பாளையம் —1 , துலுக்கப்பாளையம் —2 , வாழப்பட்டு , விஸ்வநாதபுரம் , பாபா நகர் , அண்ணா நகர் 1 , 2 ஆகிய பகுதிகளில் உள்ள பொது கழிவறைகளில் கழிவு நீர் செல்லும் குழாய்களில் உள்ள Manual cover உடைந்து அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுகிறது . இதனால் சுகாதார கேடு ஏற்படும் நிலை உள்ளது . மேலும் இதன் காரணமாக பொபது மக்கள் மிகவும் அவதிபடுகிறார்கள் .எனவே சுகாதார கேட்டை தடுக்கும் வகையிலும் , பொது மக்கன் நலன் கருதியும் உடைந்த அனைத்து இரும்பு மூடிகளை அகற்றி விட்டு புதியதாக சிமெண்ட் சிலாப் மூலம் மூடி சுத்தம் செய்து சுகாதார கேடு ஏற்படா வண்ணம் தடுக்கலாம் . இதற்கு செலவினம் ரூ . 25000/— ஆகும் .இதனை நகராட்சி பொது நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:</u> . 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2.தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 3475 /2021/இ1)**

**தீர்மான எண் . 239. அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.30.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக முன்புறம் உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள 25 HP சம்மொ்சிபில் மோட்டார் பம்பு பழுதடைந்து அலுவலகத்தில் உள்ள மேல் நிலை தண்ணீர் தொட்டியில் தண்ணீர் ஏற்ற இயலாமல் உள்ளது . இதனால் பொது மக்களுக்கு தண்ணீர் சப்ளை செய்ய இயலவில்லை . எனவே குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் மேற்படி பழுதடைந்த 25HP சம்மொ்சிபில் மோட்டார் பம்பு செட்டை நகராட்சி ஒப்பந்ததாரர் ஒருவர் மூலம் செய்து முடிக்கலாம் . இதற்கு செலவினம் ரூ . 32000/– ஆகும் .இதனை நகராட்சி பொது நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:</u> . 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2.தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 3476 /2021/இ1)

**தீர்மான எண் . 240 . அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.31.** நெல்லிக்குப்பம் நகராட்சி SJSRY திட்ட நிதியின் கீழ் சமுதாய அமைப்பாளர்களுக்கும் , வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் நடத்தப்படும் கூட்டத்திற்கும் PMSVA Nidhi அது சம்மந்தமான விவரங்களை கணிணியில் பதிவேற்றம் செய்வதற்கும் மற்றும் திட்டம் சார்ந்த அனைத்து பணிகளுக்கும் கீழ் கண்ட அலுவலக பொருட்கள் , கணிணி சார்ந்த பொருட்கள் , மேஜை , நாற்காலி மற்றும் பீரோ வாங்கி வழங்கும் பணிக்கு 03.09.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ.எண் | விலைப்புள்ளிதாரார் பெயர்/ முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Raj computers<br>1. Dowlath Nagar<br>Semmandalam . Cuddalore. | 184020/– |
| 2 | Jeevi computers<br>33 . Bus stand side<br>Cuddalore. | 188622/– |
| 3 | S.S.Systems<br>47/A . Shanmugam Street<br>Villvanagar<br>Cuddalore. | 186946/– |

<u>அலுவலகக்குறிப்பு:</u> . 1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Raj computers . 1. Dowlath Nagar. Semmandalam . Cuddalore.அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்று;ம் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண். 2741 /2021/இ1

**தீர்மான எண் . 241 . அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி